**செய்தி வெளியீடு எண்: 163** **நாள் : 17.04.2015**

**<u>செய்திக்குறிப்பு</u>**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் கீழ் இயங்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் ரூ. 9300 – 34800 + தர ஊதியம் 4500 என்னும் சம்பளத் திட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியருக்கான அனைத்துப் படிகளுடன் கூடிய ஐந்து தொகுப்பாளர் (Compiler) பணியிடங்களுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பொதுப்போட்டி (முன்னுரிமை) – 1, அட்டவணை வகுப்பினர் (அருந்ததியர்) – ஆதரவற்ற விதவை (முன்னுரிமை) – 1, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமை) – 1, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் தவிர) முன்னுரிமை – 1 மற்றும் பொதுப்போட்டி – ஆதரவற்ற விதவை (முன்னுரிமையற்றவர் ) – 1 என்னும் சுழற்சி முறையில் நிரப்பப்பட இருக்கின்றன. இதற்கான கல்வித்தகுதி எம்.ஏ., தமிழ் இலக்கியம், அதிகபட்ச வயது வரம்பு 1.7.2015 அன்றுள்ளபடி 35. நடைமுறையிலுள்ள தமிழக அரசின் விதிமுறைகளின்படி வயது வரம்பில் தளர்வு செய்யப்படும். விருப்பமும் தகுதியும் உடையவர்கள் வெள்ளைத் தாளில் கடவுச்சீட்டு அளவிலான புகைப்படத்தினை விண்ணபத்தில் ஒட்டி, பெயர், முகவரி, பிறந்த நாள், மதம், இனம், கல்வித்தகுதி, முன்னுரிமை கோருவதற்கான சான்று ஆகிய விவரங்களுடன் தேவையான சான்றிதழ்களின் ஒளிப்படிகளைச் சுய சான்றொப்பத்துடன் இணைத்து, வரும் 05.05.2015 பிற்பகல் 5.30 மணிக்குள் நேரிலோ, பதிவு அஞ்சலிலோ இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு), செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், சி–48, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அலுவலக வளாகம், 2–வது நிழற்சாலை, அண்ணா நகர், சென்னை – 600 040 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும், விவரங்களுக்கு 044–26215023 என்னும் தொலைபேசி எண்ணில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு),
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்
திட்ட இயக்ககம், சென்னை–600 040.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**